பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

இன்றைய அறிமுகம்
நாளைய நாகரீகம்
இறக்குமதி செய்யப்பட்ட
சாறிகள்,
றெடிமேட் ஆடைகளை
நவீன டிசைன்களில்
மனம் போல்
பெற்றுக்கொள்ள

சோபனா
றெக்ஸ்ரைல்

16, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

விலை ரூபா 3-50

★ கூறைகள்
★ காஞ்சிபுரம்
★ பட்டு வேட்டி
★ பிளவுஸ் வகைகள்

மற்றும்

சுபமூர்த்த புடவைகளை
சுலபமே தெரிவுசெய்ய

சோபனா
றெக்ஸ்ரைல்

16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 5 சுக்கில ஞு பங்குனி மீ 01 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 16 (14-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 33

# வாபஸாகும் படை
# தமிழகம், ஆந்திராவில்
# தயார் நிலையில்!

புதுடில்லி, மார்ச் 14

இலங்கை வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து வெளியேறும் இந்திய அமைதிப்படையினரை தமிழ்நாடு, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் தயார் நிலையில் நிறுத்தி வைக்க மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது.

இந்திய அமைதிப்படை விலகல் இம்மாதம் 25, 30 ஆம் திகதிகளுக்குள் முடிவு அடைந்து விடும் என்று புதுடில்லி இராணுவ தலைமை நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு ஈழத்தில் இருந்து திரும்பும் இந்தியப்படையினர் தமிழ் நாட்டிலும் ஆந்திராவிலும் முக்கியமான இடங்களில் தயார் நிலையில் வைத்திருக்க இராணுவப் பிரிவு முடிவு செய்துள்ளது.

இதற்கான திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் புதுடில்லிச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (உ-எ)

## படை இறுதி விலகல் நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெறும்?

புதுடில்லி, மார்ச் 14

இந்தியப் படையின் இறுதி அணி இலங்கையிலிருந்து வெளியேறும் நிகழ்ச்சியை கோலாகலமாகக் கொண்டாடுவதா என்பது குறித்து இந்தியத் தரப்புக்குள் இழுபறி நிலை நிலவுவதாகத் தெரியவருகின்றது.

இந்த நிகழ்ச்சியை கோலாகலமாகக் கொண்டாடுவதை இந்திய வெளியுறவுத் துறை விரும்புகிறது. இது ஒரு பெரிய நிகழ்ச்சி என்று வெளியுறவுத் துறை கூறுகின்றது.

ஆனால் இந்திய இராணுவத்துறை, இந்த சமயத்தில் இதை பெரிதாகக் கொண்டாடுவது விரும்பத்தக்கதல்ல என்று கருதுவதாகத் தெரிகிறது.

இந்த விடயம் குறித்து தீர்க்கமான முடிவு எடுத்த பின்னரே படை இறுதி வில

( 5 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



என்ன சாதிச்சுப் போட்டம் கொண்டாட்டம் நடத்த எண்டு நினைக்கினமோ...?

## சுப நேரம்

14-3-1990

புதன்கிழமை பங்குனி 1

சுபநேரம்:
4-52முதல் 6-22 வரை

இராகுகாறம்-
12-22முதல் 1-52 வரை

## கொழும்பில் புனர்வாழ்வு மாநாடுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து எதிர்வரும் 19 ஆம் திகதி இரண்டு மாநாடுகள் கொழும்பில் நடைபெறவிருக்கின்றன.

அன்று காலை புனர்வாழ்வு அமைச்சில் ஒரு மாநாடும், மாலை நிதி அமைச்சு செயலாளர் திரு. பாஸ்கரலிங்கம் தலைமையில் மற்றொரு மாநாடும் நடைபெறும்.

இம்மாநாடுகளுக்கு அரச அதிபர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (இ-3)

மர்மம் நீடிக்கிறது:

# வரதராஜப்பெருமாள் இந்தியாவில் இல்லை!

கொழும்பு, மார்ச் 14

இந்திய விமானப்படை விமானத்தில் கடந்த ஞாயிறன்று திருகோணமலை சீனக்குடா முகாமிலிருந்து புறப்பட்டுச்சென்ற வடக்கு, கிழக்கு மாகாண முதல்வர் திரு. வரதராஜப்பெருமாள் தற்போது இந்தியாவில் இல்லை.

ஈ. பி. ஆர். எல். எவ்வைச் சேர்ந்த எம். பி. ஒருவர் நேற்று கொழும்பில் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

"திரு. வரதராஜப்பெருமாள் திருகோணமலையிலிருந்து புறப்பட்டு புதுடில்லி போய்ச்சேர்ந்தது உண்மை. ஆனால் அங்கு இறங்கிய கையோடே அவர் வேறுவிமானத்தில் பிறிதொரு நாட்டுக்குச் சென்றுவிட்டார். அனேகமாக நியூஸிலாந்து, மொறிஷியஸ், மாலைதீவு ஆகிய மூன்று நாடுகளில் ஏதாவது ஒன்றுக்கு அவர் போயிருக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவருடன் அவரதுமனைவி, மற்றும் மூன்று பிள்ளைகளும் சென்றிருக்கிறார்கள். வேறு யாரும் அவருடன் செல்லவில்லை" இப்படி அந்த எம். பி. மேலும்சொன்னார்.

# ஆறாவது திருத்தத்தை நீக்குவது அரசின் பலவீனத்தைக் காட்டும்

## உதயனுக்கு அளித்த பேட்டியில் அஷ்ரப்

– கொழும்பிலிருந்து உதயன் சிறப்புச் செய்தியாளர் –

கொழும்பு, மார்ச் 14

இலங்கை அரசமைப்புச்சட்டத்தின் ஆறாவது திருத்தத்தினை நீக்குவதென்பது அரசாங்கத்தின் பலவீனத்தையே காட்டுகிறது. அரசு ஆறாவது திருத்தத்தை நீக்கினால் அது தனிநாடு கோரிக்கைக்கும், அதற்கான போராட்டத்துக்கும் அரசு அங்கீகாரம் அளிப்பதாகவே அமையும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் இவ்வாறு தெரிவித்தார்.

அவரது கொழும்பு இல்லத்தில் வைத்து "உதயனுக்கு" அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

பேட்டி விவரம் வருமாறு:-

கேள்வி:- தற்போதைய சூழ்நிலையில் வடக்கு கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டால் எத்தகைய விளைவுகள் ஏற்படும்?

பதில்:- மாகாண சபையை கலைத்தால் சகலரும் சட்டியில் இருந்து அடுப்புக்குள் விழுந்த கதையாகத் தான்

( 5 ஆம் பக்கம் பார்க்க)

பயிலுநர் ஆசிரியர்:

## நாளைக்கு முன்பதாக நியமனம் வழங்கிடவேண்டும்

### கல்விச்சேவை ஆணைக்குழு உத்தரவு

கொழும்பு, மார்ச்14

இம்மாதம் 15ஆம் திகதிக்குள் வடக்கு கிழக்கில் பயிலுநர் ஆசிரியர்களுக்கான நியமனங்களை வழங்கிவிடவேண்டும் என கல்விச்சேவை ஆணைக்குழு சகல மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளது.

சுமார் 3 ஆயிரத்து 200 பேருக்கு இவ்வாறு நியமனங்கள் வழங்கப்படும் என்று கல்விச்சேவை ஆணைக் குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு. எஸ். ஏ. பிரேமரத்தின உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில் கூறியதாவது:

வடக்கு கிழக்கில் இருந்து பயிற்சி ஆசிரியர் பதவிகளுக்காக சுமார் 45 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களில் பெரும்பாலானோர்க்கு தகுதிகள் இருந்தும்

[5 ஆம் பக்கம் பார்க்க]

நாளை நியமனப் பத்திரங்கள்

## கிளிநொச்சியிலிருந்து 199பயிலுநர் ஆசிரியர் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 14

கிளிநொச்சி மாவட்டத்தில் மொத்தம் 199 பேருக்குப் பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து 123 பேருக்கும் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து 45 பேருக்கும் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து 31 பேருக்கும் நியமனம் கிடைத்துள்ளது.

பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளில் இருந்து நியமனம் பெறுவோருக்கு நாளை (15 ம் திகதி) காலை 9 மணிக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்படும்.

கரைச்சி (கிளிநொச்சி-கண்டாவளை) உதவி அரச அதிபர் பிரிவிலிருந்து நியமனம் பெறுவோருக்கு நாளை நண்பகல் ஒரு மணிக்கு நியமனக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மாயமாக மறையும் மாகாணசபை வாகனங்கள்!

திருகோணமலை, மார்ச் 14

திருகோணமலையில் பரபரப்பாக ஓடித்திரிந்த மாகாணசபைக்குச் சொந்தமான வாகனங்கள் பலவும் எங்கோ மாயமாக மறைந்துவிட்டன. ஒருசில வாகனங்களைத்தவிர ஏனைய வாகனங்களைக் காணமுடியவில்லை.

இலக்கத் தகடுகள் இல்லாத வாகனங்கள் ஓடுவதும் குறைந்துள்ளது. அனேக வாகனங்களுக்குப் புதிய இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன,

இதேவேளை அனேக சாரதிகள் விடுதலையில் சென்றுள்ளார்களாம். இதனால் வாகனங்களைச் செலுத்துவதற்கு சாரதிகள் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

இதுஇவ்வாறிருக்க, விடுதலைப்புலிகள் திருமலையில் ஜமாலியாப் பகுதி, பாலையூற்று ஆகிய பகுதிகளில் நிலைகொண்டுள்ளனர். இப்பகுதிகளில் விடுதலைப் புலிகளின் கொடிகளும் பறக்கவிடப்பட்டுள்ளன. (ஒ-150)

## படகு மூழ்கி 14பேர் உயிரிழப்பு

சென்னை, மார்ச் 14

கர்நாடகத்தில் கிருஷ்ணா நதியில் படகு ஒன்று மூழ்கியதில் 14 பேர் இறந்தனர்.

12 பேர் செல்ல வேண்டிய படகு ஒன்றில் 20 பேர் சென்றபோது இவ்விபத்து இடம் பெற்றது. (ஒ-எ)

அமைதியை ஏற்படுத்த

# அரசுக்கு பொன்னான நேரம்; தவறினால் இறுதிப் போர் மூளும்

## ஈரோஸ் பாலகுமாரன் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 14

இலங்கையில் நிரந்தர அமைதியை ஏற்படுத்த இலங்கை அரசுக்கு பொன்னான சந்தர்ப்பம் ஒன்று கிடைத்திருப்பதாக ஈரோஸ் இயக்கப் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு மேற்கொண்டிருக்கும் பேச்சுவார்த்தை இலங்கை அரசுக்குக் கிடைத்துள்ள கடைசிச் சந்தர்ப்பம் மட்டுமல்ல பொன்னான வாய்ப்பும் கூட.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும்; இல்லையேல் இலங்கை ஓர் இறுதிப் போரைச் சந்திக்க வேண்டி வரும் — என்று திரு. பாலகுமாரன் எச்சரிக்கை விடுத்திருக்கிறார். (ஒ-எ)

ஜி.சீ.ஈ. உயர் பரீட்சை முடிவு:

## 50 சதவீதமானவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி

### யாழ் இந்து முன்னணியில்

நேற்று வெளியான ஜி. சீ. ஈ. (உயர் தர) முடிவுகளின் படி பரீட்சையில் தோற்றியவர்களில் ஐம்பது சதவீதமானவர்கள் பல்கலைக் கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். இந்துக் கல்லூரியில் தோற்றிய 224 மாணவர்களில் 131 பேரும்- யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தோற்றிய 161 பேரில் 55 பேரும்- வைத்தீஸ்வராவில் 18 பேரும், வேம்படியில் 175 பேரும், சென். பற்றிக்ஸில் 56 பேரும் பல்கலைக் கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

பெரும்பாலானவர்கள் வைத்திய, பொறியியல் துறைகளுக்கே தகுதி பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## 14 பேர் 4 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றனர்!

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ் நகரப்பாடசாலைகளில் நேற்று வெளியான ஜீ.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை முடிவுகளில் 10 மாணவர்கள் 4 பாடங்களிலும் அதி விசேட சித்தி (ஏ) பெற்றனர்.

பருத்தித்துறை பாடசாலைகளில் 4 பேர் 4 ஏ பெற்றுள்ளனர்.

பரீட்சை முடிவுகளை அறிய நேற்றுக்காலை ஏராளமான மாணவர்கள் கல்லூரிகளில் கூடியிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

யாழ் இந்துக்கல்லூரி மாணவர்களான ரி. கிருஷ்ணகுமார், எஸ். சுரேஸ்குமார் ஆகியோர் பொறியியல் துறையிலும், எஸ். ஸ்கந்தன் எல். கெங்காதரன் ஆகியோர் மருத்துவத் துறையிலும் 4 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றனர்.

சென் ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த துஷ்யந்தா திசநாயகம் பொறியியல் துறையிலும், சுபநேசன் நடேசபிள்ளை மருத்துவத் துறையிலும் 4 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றனர்.

யாழ் வேம்படி மகளிர் கல்

( 5 ஆம் பக்கம் பார்க்க)

## யோகி கொழும்பில்

கொழும்பு, மார்ச் 14

சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகியும்அவரதுசகாக்களும்நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர் (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காயம், பீட்றூட், கோவா விதைகள் விற்பனைக்குண்டு பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (2819)

மானிப்பாய் தபாற்கந்தோர் வீதியில் இரண்டு காணித்துண்டுகள் (ஒன்றரை பரப்பு, 3 பரப்பு) அத்துடன் வயற்காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மேதர், 195, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [12037]

ஆனைக்கோட்டை கூளாவடியில் பிரதான வீதிக்கு அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு: போதகர் புதுவாழ்வு நிலையம், கூளாவடி, ஆனைக்கோட்டை. (2859)

### கோழிக்குஞ்சு விநியோகம் [Uplands Farm]

(Unsexed) தனி சிகப்பு, கறுப்பு சேவல் (பிலிமத்) கறுப்பு வரி சேவல்(Lohmann) பிறவுண் சேவல், வெள்ளை கறுப்பு பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் (14-3-90) புதன்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலைய அருகில்) (2837)

### தேவை

கோவில் வேலை, பூந்தோட்ட வேலைகளில் அனுபவமுள்ள ஊழியர்கள்தேவை நற்சான்றிதழ்களுடன் தொடர்பு கொள்ளவும். முகாமையாளர், ஸ்ரீவெங்கடேச வரதராசப் பெருமாள் தேவஸ்தானம், யாழ்ப்பாணம். (2858)

நல்ல நிலையில் உள்ள Pressure. Cooker, (10 Lit) Sumeet Grinder தேவை. வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும்: Jeyam, 121, Brown Road, Jaffna. (2855)

### பெண் காசாளர் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு பெண் காசாளர் தேவை முன் அனுபவம் உள்ளவருக்கு முன் உரிமை வழங்கப்படும். விண்ணப்பிக்கவும் துர்க்கா டிரேடர்ஸ் 25 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (2857)

### மணமகள் தேவை

நற்குலத்தவரும் அரசாங்க ஓய்வூதியம் பெறுபவரும் கனடாவில் நிரந்தரப் பிரஜா உரிமை பெற்று வசிப்பவரும் மனைவியை இழந்த 60 வயதுடைய பொறுப்புக்கள் இல்லாதவருக்கு படித்த நற்குணமுள்ள கனடாவிற்கு செல்ல விருப்பமுடைய மணமகள் தேவை. தொடர்பு சி. இரத்தினசபாபதி 73, இராணி வீதி, நல்லூர். (12036)

### கடை வாடகைக்கு

முனீஸ்வரன் வீதி, மணிக்கூட்டு வீதி, நல்லூர் ஆகிய பகுதிகளில் கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் செ. நடராசா 111, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (2856)

### அச்சடிக்கும் திருமண அழைப்பிதழ்

சகல டிசைன்களிலும் அச்சடிக்கும் திருமண அழைப்பிதழ் கார்ட்டுகள் விற்பனைக்கு உண்டு, ஸ்ரீ காந் புத்தகசாலை, (பஸ் நிலையம் முன்பாக) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/3486)

### Pharmacy Classes Biginners Revision

For Students who wish to appear for the Pharmacy Exam held by Ceylon medical College Council Classes will be conducted by Qualified Lecturers on Sundays Qualification G. C. E. O/L for Further Details contact Northern pharmacy Hospital Road, Jaffna. (2810)

### தவறிவிட்டது

T. தயாளசுந்தரன் ஆகிய எனது 633062765 V எனும் இலக்கமுள்ள அடையாள அட்டை தவறி விட்டது கிடைத்தவர்கள் உதயன் காரியாலயத்திலோ அன்றி T. தயாளசுந்தரன் தோப்புக்காடு, காரைநகர் என்ற முகவரிக்கோ தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். [2827]

### ஆங்கிலப் புத்தகம்

ஆங்கிலம் பேச, எழுத வாசிக்க சிறந்த முறையில் எழுதப்பட்ட புத்தகமென எல்லோராலும் பாராட்டுப் பெற்ற புத்தகம்தான் Basic Grammar & Spoken Practical கிடைக்கும் இடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (11992)

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி/3452)

### புத்தகம்

இந்திய எழுத்தாளர்களான லக்ஸ்மி, சிவசங்கரி, அனுராதாரமணன், பாலகுமாரன், ரமணிச் சந்திரன் மேத்தா, உதயமூர்த்தி, த.சி.கணேசன், வரதராசன், கண்ணதாசன், சிறுவர் புத்தகங்கள், ஜோதிடம், சித்தமருத்துவம், புத்தகங்கள் வந்துள்ளன பிரதிகட்குமுந்துங்கள் நூலகங்கள், தொகையாக கொள்வனவு செய்வோர், வியாபாரிகட்கு, விசேட கழிவு. ஸ்ரீகாந் புத்தகசாலை மின்சார நிலைய வீதி, பஸ்நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (சி/3488)

### புலமைப் பரிசில் பரீட்சை ஆண்டு 5

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை (இரண்டாவது) 18-03-90 ஞாயிறு மு.ப 10.30 பி.ப 1 30 ற்கு நடைபெறும் மேற்படி பரீட்சைக்கான காலை, மாலை வாராந்த வகுப்புகள் ஆரம்பமாயுள்ளன. கடந்த வருடம் அதிசிறந்த பெறுபேறுகளைப் பெற்ற நிறுவனம் ஆண்டு 4 ற்கு அடிப்படை வகுப்புகள் ஆரம்பமாயுள்ளன. புதிய கல்வி நிலையம் செங்காதரன் ஆஸ்பத்திரியடி யாழ்ப்பாணம். (2784)

---

பல்கலைக்கழக அனுமதிக்கு புள்ளிகள் போதாதா?
கவலையை விடுங்கள் நீங்களும் பட்டதாரியாகலாம்

## வெளிவாரிப்பட்டப் படிப்புகள்

**கல்வியாண்டு 1990 / 91**

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெளிநிலைப்பட்டப் பாடநெறிகளான

- ★ கலைமாணி B. A
- ★ விஞ்ஞான மாணி (புள்ளி விபரவியல்) B. Sc
- ★ வணிகமாணி (B. Com)

க.பொ.த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

புதிய பிரிவு விரிவுரைகள் 01 - 04 - 1990 இல் ஆரம்பமாகின்றன.

விண்ணப்ப முடிவுத் திகதி 20 - 04 - 1990

விபரங்களுக்கு:

உதவிப் பதிவாளர்
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
**148/1, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**


மாணவர் கவனத்திற்கு

- வணிகமாணி பட்டப்பாட நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் 15 - 03 - 90 க்கு முன்னர் பதிவுகளைச் செய்து கொள்ளல் வேண்டும்.
- பல்கலைக்கழகங்களின் முன்னணி விரிவுரையாளர்கள் விரிவுரைகளை வழங்கும் ஒரேயொரு நிறுவனம் யாழ்நகரில் இதுவே.

[சி-3992]

---

## 31ம் நாள் நினைவஞ்சலி



**திரு. முத்துக்குமார் கதிரவேலுப்பிள்ளை**
(முன்னாள் ராணி, லிடோ சினிமா இயந்திர இயக்குனர்)

| தோற்றம்: | இறப்பு: |
|---|---|
| 1938 – 10 – 08 | 1990 – 02 – 12 |

(14 — 03 — 1990)

அன்பின் பண்பின் உறைவிடமாய் பாசத்துடன் எம்மை வளர்த்து அறிவொளியூட்டி வளமுடன் வாழ வழி வகுத்து எம் நெஞ்சங்களில் அழியாத ஓவியமாய் நிறைந்து நிற்கும் எங்கள் அன்பு அப்பாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

– பிள்ளைகள்

213 (27) பீச்றோட்,
யாழ்ப்பாணம். [12030]

---

## WANTED

**Accounts Clerk Cum Typist [English]**

Applications are invited from Qualified persons in both Accounts and English Typing.

Salary- Negotiable.
Age - 25 — 35 years

Apply to:

**Medical Superintendent,**
**Green Memorial Hospital,**
**Manipay.**

**Before 31st March 1990.** [C-3995]

---

## 31ஆம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி
**இந்திரேஸ்வரி மயில்வாகனம்**
[இந்திரா]

| மலர்வு: | நிறைவு: |
|---|---|
| 17 – 04 – 1932 | 14 – 02 – 1990 |

**திதி: 16 — 03 — 1990**

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பாசத்தின் சுடராகவிருந்து எம்மையெல்லாம் வழிநடத்திய எம் குடும்பத்தலைவி (இந்திரா) இந்திரேஸ்வரி மயில்வாகனம் (14 - 02 - 90) அதிகாலை இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் பூதவுடல் அன்றைய தினம் பி ப. 4மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவர் பொன்னையா மயில்வாகனம், பிரபல வர்த்தகர் (நுவரேலியா - கந்தர்மடம்) அவர்களின் அன்பு மனைவியும், விக்னேஸ்வரன் (University of Mysore) திருத்தணிகேஸ்வரன் (France), திருமதி திருத்தாம்பிகை ஜெயச்செல்வன் (Adayar Music College Madras) அவர்களின் அன்புத் தாயாரும்; திரு. ஜெயச்செல்வன் (America) அவர்களின் அன்பு மாமியாருமாவார்.

அமரர் பரமானந்தராசா (முன்னாள் Chairman Kopay) திருமதி இராஜேஸ்வரி முருகரட்ணம் (முன்னாள் ஆசிரியை இராமநாதன் கல்லூரி சுன்னாகம்) திருமதி யோகேஸ்வரி சபாரட்ணம் (முன்னாள் ஆசிரியை நாவலர் மகாவித்தியாலயம் - யாழ்ப்பாணம்) திரு. சண்முகராஜா (London), திருமதி மகேஸ்வரி கணேசமூர்த்தி (Bahrain), திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் (வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்) அவர்களின் அன்புச் சகோதரியுமாவார். இச் செய்தியை உரியகாலத்தில் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருவதில் ஏற்பட்ட தடங்கலுக்கு வருந்துகிறோம்.

அவரின் மரணச்செய்தியைக் கேள்வியுற்று வருகை தந்து எம் ஆறாத்துயரில் கலந்து கொண்ட அனைவருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், மலர்கொத்துகள், மாலைகள் சாத்தியவர்களுக்கும், உடன் நின்று குறிப்பு அறிந்து பல உதவிகள் நல்கிய பெருமனத்தவர் அனைவருக்கும் அவரின் அபிமான ஆத்மசாந்தி நிகழ்ச்சியாகவுள்ள — பிரார்த்தனை சாயிபாபா சமித்தியினரால் மிகவும் உருக்கமாக உடன் பிறந்தோருக்குரிய கடமையுணர்வுடன் நடாத்தியமைக்கும் எமது கரம்கூப்பி நன்றி நல்கின்றோம்.

### வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்னாரின் அந்தியேட்டி (15-03-90) கீரிமலையில் நடைபெறும். அவரின் வீட்டுக்கிருத்தியம் (16-03-90) வெள்ளிக்கிழமை (பங்குனி 3ஆம் திகதி) பகல் 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் கலந்து கொள்வதுடன் மகேஸ்வர பூசையிலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**கணவன், மக்கள், சகோதரர்கள்.**

''திருத்தணிகை''
98, பலாலி வீதி,
யாழ்ப்பாணம். [12011]

---

## Wanted Immediately

**RESIDENT DOCTORS**

With M. B. B. S for the Unified Medical Service of the Jaffna Diocese of the Church of South India.

**Salary:- Negotiable**
**Apply Before 5th April 1990, To:-**

**The Medical Superintendent**
**Green Memorial Hospital,**
**Manipay.** [C/3996]

---

# கலை, வர்த்தகக் கல்லூரி

**மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**
[வெலிங்டன் சந்தி அருகே]

## A/L 90 C. C. A
## மீட்டல் வகுப்புகள்

| | |
|---|---|
| பொருளியல் | — வரதராஜன் |
| வர்த்தகம் | — ரட்ணம் |
| கணக்கியல் | — ஸ்ரீ |
| அளவையியல் | — S. S. மனோகரன் |
| இந்துநாகரீகம் | — கிருஷ்ணா |
| தமிழ் | — குழந்தை |

**ஆரம்பம்:**

**சனி, ஞாயிறு வகுப்புகள்**
**17-3-90 சனி 10.00 a.m.**

## ★ பகல் நேர வகுப்புகள் ★

**19-3-90 திங்கள் 8.00 a.m.**

[சி-4000]

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வன் மயில்வாகனம் முரளிகிருஷ்ணா**

| தாயின்மடியில் வாழ்விற்காக | ஈழமண்ணின் விடிவிற்காக |
|---|---|
| 17 - 08 - 1967 | 14 - 03 - 1988 |

தியாகிகளின் வரிசையில் நீ தனித்துவமானவன்
வீரர்களின் வரிசையில் நீ மகத்துவமானவன்
போராளிகளின் வரிசையில் நீ தன்னிகரில்லாதவன்
ஏன்?

உனது கடந்த காலத்தில் ஏற்பட்ட அனுபவங்களின் யதார்த்தங்களை உணர்ந்து உனது நிகழ்காலத்தின் சுகபோகங்களை துறந்து உனது எதிர்காலம் தாயகத்தின் விடிவில் தான் என்பதனை அறிந்து
சுதந்திர தாகம் கொண்ட இலட்சிய வேங்கையாகி
ஈழவர்களின் போராட்ட வரலாற்றில் கலங்கரை விளக்கமாகி

சுந்தகிர தாகமே உனது கனவாகி-நனவாகி
என்றோ மலர இருக்கும் சுதந்திர தேவிக்கு- சுதந்திர தாகமூறிய உனது குருதி ஏற்றப்பட்டதனாலன்றோ

உனது பேரிழப்பிலும் பெருமையுறும்:
**அம்மா, தம்பி, உறவினர்கள், நண்பர்கள்.**

''தணிகை''
நெல்லியான் வீதி,
சுழிபுரம். (2792)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

செல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

**பொருள்:**

அணுகிக்குறை சொல்லிய அளவிலேயே சான்றோர் பயன்படுவர்; கரும்புபோல் அழித்துப் பிழிந்தால்தான் கீழ்மக்கள் பயன்படுவர்.

**உதயன்**

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 2288
யாழ்ப்பாணம்.
14-03-1990 த. பெ. இலக்கம் : 23

# லண்டன் கருத்தரங்கு

தமிழ்ப் பிரதேசங்களை வளம்படுத்தத் தேவைப்படும் அபிவிருத்திப் பணிகள் சம்பந்தமாக இம்மாத இறுதியில் லண்டனில் கருத்தரங்கு ஒன்று நடைபெற இருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் முன்னெடுக்க வேண்டிய ஆராய்ச்சி, அபிவிருத்திப் பணிகள் குறித்து நிபுணர்கள், ஆய்வியலாளர்களின் கருத்தைத் திரட்டுவதே கருத்தரங்கின் முக்கிய நோக்கம். ஆராய்ச்சி, அபிவிருத்திப் பணிகளில் மக்களின் பங்களிப்பை அதிகரிப்பதும் கருத்தரங்கின் பிரதான இலக்குகளில் ஒன்று என அறிவிக்கப்படுகிறது.

நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள், நிபுணர்கள், தொழில்சார்பினர் ஆகியோரின் அனுசரணையுடன் ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவைப்படும் அர்த்த பூர்வமான, நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளை ஆரம்பிக்க இந்தக் கருத்தரங்கு உதவவேண்டும் என்பதே தமது எண்ணப்பாடு என்று அதனை ஒழுங்கு செய்துள்ள றூட் ஆய்வு நிறுவன வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இந்த முயற்சியை வரவேற்கிறோம். இது காலத்தின் தேவை. பல காலம் முந்தியே முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டியது. இப்போதாவது கருக்கொள்கிறதே என்று மகிழ்வு கொள்ளலாம். ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் அரசியல் சுதந்திரத்துக்கு அடித்தளமாக விளங்குவது பொருளாதார சுபீட்சம். இதனைத் தாயகப்பற்று, இனப்பற்று உள்ள எவரும் மறந்துவிடக் கூடாது.

இப்போது நடப்பது இருபதாம் நூற்றாண்டு என்று சொல்வதை விட, விஞ்ஞான-தொழில் நுட்ப யுகம் என்பதே பொருத்தம். இன்னும் ஒரு தசாப்தத்தில் பிறக்கப் போகும் இருபத்தோராம் நூற்றாண்டுக்கு உலகின் பல நாடுகளும் தம்மைத் தயார் செய்து தரம் உயர்த்தி, முன்னேறி, வளம்பெருக்கி வருகின்றன.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகள் வளர்ச்சி காணாததால் அவை பொருளாதாரக் கீழிறக்கம் என்ற புயலில் சிக்கிச் சீரழிகின்றன. நவீன யுகத்தில் பொருளாதாரக் கட்டமைப்பு ஸ்திரம் பெறுவதற்கும், பயன் விளைப்பதற்கும் விஞ்ஞான தொழில்நுட்ப அடித்தளம் ஆழமாக்கப்பட வேண்டும். அதனை வெறுமனே சொல்வதால் அல்லது உணர்வதால் மட்டும் காரியசித்தி காணமுடியாது. ஆக்கபூர்வமாக நடைமுறைப்படுத்தினால் மட்டுமே பொருளியல் சீரழிவுக்கும், மக்கள் கஷ்டங்களுக்கும், பின்தங்கிய நிலைக்கும் முடிவு காணமுடியும்.

தமிழ்ப் பிரதேசங்களின் வளர்ச்சி முகத்தில் இத்தகைய தவறுகள் நேர்ந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எமக்குரிய தொழில்நுட்ப, விஞ்ஞானத்துறைத் திட்டங்கள் எமது புவியியல், மூலவளவியல், மனிதவளவியல்களைத் தக்கபடி பயன்படுத்தும் பின்னணியில் அமைய வேண்டும். மேலை நாடுகளை அல்லது வேறு நாடுகளை ''ஈயடிச்சான் கொப்பியடிச்சான்'' என்ற நிலை இருக்கக்கூடாது. சுதேசிய தொழில்நுட்பங்களை அடித்தளமாக்கி பொருளாதார - அபிவிருத்தி திட்டங்கள் உருவாக்கப்படுவது அவசியம்.

லண்டனில் நடக்கும் கருத்தரங்கு இதற்குத் தக்கபடி அத்திவாரம் இடவேண்டும் என விரும்புகிறோம். வெறும் சித்தாந்த, கோட்பாட்டுக் குவியல்களை முன்வைக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித்துக் கலையும் கூட்டமாக அது அமையக்கூடாது.

உரிய தூரதிருஷ்டியுடன், நீண்டகால நலன்களை முன்னிறுத்தி, நடைமுறைச் சாத்தியமான, ஒருமுகப்படுத்தப்பட்ட, நெறிநேராக்கப்பட்ட யோசனைகளும், திட்டங்களும் வகுக்கப்பட வேண்டும்.

தமிழ்ப் பகுதிகளை தனிப்பிரதேசமாகக் கொண்டே விஞ்ஞான, தொழில் நுட்ப, அடித்தளத்தில் எழுப்பப்படும் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் வரையப்பட வேண்டும் என்பது மிகவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

திட்டங்கள், காகிதங்களில் இருக்காமல் செயல்வடிவம் பெறுவதற்கு வழிசெய்யும் அரசியல் அதிகாரமும் ஏற்படவேண்டும். அப்போது தான் இதுவரை கண்ட இன்னல்களுக்கு ஈடுகட்டித் தமிழர்கள் தலையெடுக்க முடியும்.

யாழ். மாநகர சபை எல்லைக்குள்

## அங்கவீனர் பற்றிய விவரம் சேகரிப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம் மார்ச் 14

யாழ் - மாநகரசபை எல்லைக்குள் உள்ள அங்கவீனர்களுக்கு புனர் வாழ்வு அளிக்கும் வகையில் அவர்கள் பற்றிய புள்ளிவிபரங்கள் திரட்டப்பட இருக்கின்றன.

யுனிசெப் அமைப்பு இவர்களுக்கு உதவிசெய்ய நிதி வழங்க ஒப்புதல் அளித்துள்ளதை அடுத்து தொண்டர்கள் மூலம் விவரங்கள் சேகரிக்கப்பட இருக்கின்றன.

இந்த திட்டத்துக்கு தேவையான வேலைகளை யாழ் - அங்கவீனர் சங்கமும், யாழ் - மாநகரசபையும் மேற்கொண்டுள்ளன. (இ-3)

## சென். யோசெப் சாதனை

குருநகர் மார்ச் 14

யாழ். தெற்கு கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப்போட்டிகளில் யாழ். கொழும்புத்துறை சென். யோசெப் வித்தியாலயம் ஆண்கள் பிரிவில் 19 வயதுக்கு உட்பட்ட பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

17 - 13 வயதுகளுக்கு உட்பட்டோர் பிரிவு இரண்டாம் இடங்களைப் பெற்றுத் தமது நிலையை மீண்டும் நிறுத்திக் கொண்டுள்ளது. (க- 51)

## நினைவுத்தூபி

தாளையடி மார்ச் 14

வெற்றிலைக் கேணியில் வீரமரணமடைந்த 21 தமிழீழ விடுதலைப் புலிகளின் நினைவாக நினைவுத்தூபி, திறந்து வைக்கப்படவுள்ளது.

15 ஆம் திகதி வியாழக்கிழமை இவ் வைபவம் நடைபெறவுள்ளது. (க-144)

இலங்கைத் தூதரகங்களில்

## எழுது வினைஞர் சேவை வெற்றிடம் இன விகிதாசார அடிப்படையில்

மட்டக்களப்பு மார்ச் 14

வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களில் பொதுஎழுதுவினைஞர்சேவை வெற்றிடங்கள் இன விகிதாசார அடிப்படையில் நிரப்பப்படும்.

கடந்த செப்டெம்பர் 8ம் திகதிவர்த்தமானி அறிவித்தலில்பொதுஎழுதுவினைஞர்சேவை 1ஆம் 2(அ) தரமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

தமிழ் - 6 முஸ்லிம் - 4 என வெற்றிடம் சிறுபான்மை சமூகங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது;

இவ் வெற்றிடங்களை நிரப்ப ஏற்கனவே விண்ணப்பதாரிகளில் போதியளவு சித்தி பெறாத காரணத்தினால் தகுதியானவர் விண்ணப்பிக்குமாறு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு செயலாளர் கேட்டுள்ளார்.

மேற்படி வர்த்தமானிஅறிவித்தலின் பிரகாரம் இம்மாதம் 23 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும். (க-21)

யாழ். மாவட்ட

# கைத்தொழில் நிலையங்களுக்கு ஜூலை மாதம் முதல் லைசென்ஸ்

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 14

சூழல் மாசுபடுவதை நீக்கும் வகையில் யாழ் மாவட்டத்தில் உள்ள தேநீர் கடைகள் தவிர்ந்த மற்றைய கைத்தொழில் நிலையங்களுக்கு ஜூலை மாதம் முதல் லைசென்ஸ் வழங்கும் திட்டம் அமுல் செய்யப்பட இருக்கிறது.

யாழ் - உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா இதனை உதயனுக்கு தெரிவித்தார்.

சூழல் பாதுகாப்பு சம்பந்தமாக சூழல் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளுடன் கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு திரும்பிய அவர் மேலும் தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

★ யாழ் மாவட்டத்தில் உள்ள சகல கைத்தொழில் நிலையங்களின் விவரங்களையும் உள்ளூராட்சிச் சபைகள் திரட்ட இருக்கின்றன. அவற்றில் சூழல் மாசடைதல் பற்றிய அடிப்படையிலேயே லைசென்ஸ் வழங்கப்படும். சூழல் மாசடையக் கூடிய நிலையில் உள்ளவற்றுக்கு லைசென்ஸ் வழங்கப்படமாட்டாது.

★ சூழல் பாதுகாப்பு சம்பந்தமாக விசேட பயிற்சி பெற ஒவ்வொரு உள்ளூராட்சி சபையில் இருந்து இருவர் தெரிவு செய்யப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்படுவார்கள்.

★ சூழல் பாதுகாப்பு சம்பந்தமான வேலைத்திட்டப் பாடசாலையாக வேம்படி மகளிர் கல்லூரி தெரிவு செய்யப்பட்டுள்ளது. இப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு மற்றப் பாட சாலைகளுக்கு சென்று விளக்கமளிப்பார்கள்.

★ யாழ் - மாநகரசபை நூலகத்தில் சூழல் பாதுகாப்பு சம்பந்தமான நூல்கள் கொண்ட பிரிவு அமைக்கப்படும். இதற்கு சூழல் பாதுகாப்பு அதிகார சபை 20,000 ரூபாவை வழங்கியுள்ளது.

★ பொது மக்களுக்கு இவ்விடம் குறித்து கிராமிய மட்டத்தில் கருத்தரங்குகள் நடாத்தப்படும்.

★ யாழ் - மாவட்டத்தில் உள்ள பிரபல்ய கைத்தொழில் நிறுவன ஊழியர்களைக் கொண்டு கருத்தரங்கு கூட்டி விளக்கப்படும். (இ-3)

## புலிகளின் கலண்டர்

ஒட்டுச்சுட்டான் மார்ச் 14

முல்லைத்தீவுப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாதாந்த கலண்டரும், பொக்கட் கலண்டரும் விற்பனையாகின்றன.

மாதாந்த கலண்டரில் திரு. பிரபாகரன் புலிக்குட்டியுடன் நிற்கும் படமும் பொக்கட்கலண்டரில் திரு. பிரபாகரனின் மார்பு அளவிலான படமும் உள்ளன. (க-113)

பிரகாசமான மின்சாரம் பெற

# மேலும் 13 உப மின் நிலையங்கள் தேவை

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்-மாநகரசபைப் பகுதியில் பிரகாசமான மின்சாரத்தை வழங்க 13 உப மின் நிலையங்கள் அமைக்க வேண்டியுள்ளது.

மாநகரசபை மின்சாரப் பிரிவு உயர் அதிகாரி ஒருவர் இதைத் தெரித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

யாழ்- மாநகரசபை எல்லைக்குள் உள்ள உபமின் நிலையங்கள் எல்லாம் கூடிய இணைப்புக்கள் உள்ளதாக அமைந்துள்ளன. எந்த நேரத்திலும் இந்தமின் நிலையங்கள் வெடிக்கும் ஆபத்து உள்ளது.

உடனடியாக 13 உபமின் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டியுள்ளது. அதன் மூலம் இந்த ஆபத்தை தவிர்ப்பதுடன் பிரகாசமான மின்சாரத்தையும் வழங்க முடியும்.

அரசாங்கம் இவ்விடயத்துக்கு உதவ முன்வர வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

### நினைவில் இன்று

14-03-1990

- கார்ல் மாக்ஸ் நினைவு தினம்
  பிறப்பு; 05-05-1816
  இறப்பு: 14-03-1886
- புலோலி சிவபாத சுந்தரனார் நினைவு தினம்

## வவுனியா வான்படைப் பிரிவு ஆஸ்பத்திரியில் சிரமதானம்

வவுனியா மார்ச் 14

இலங்கை வான் படையினரின் 39 ஆவது வருட கொண்டாட்டத்தையொட்டி சில தினங்களுக்கு முன்னர் வவுனியா வான்படை பிரிவினர் வவுனியா அரசினர் ஆஸ்பத்திரியில் சிரமதானத்தின் மூலம் வளவையும் 5 ஆம் இலக்க வாட்டையும் சுத்தம் செய்தார்கள். வவுனியாவான்படைப் பிரிவின் தளபதி தேஜா கூறே இதுபற்றி தகவல் தெரிவிக்கையில், இந்த ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் சிரமதானத்துடன் வவுனியா ஆஸ்பத்திரியில் உள்ள, பிரசவ அறையைத் தொடர்ந்தும் தாங்களே சுத்தம் செய்து பராமரிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## மகோற்சவம்

ஒட்டுசுட்டான் மார்ச் 14

ஒட்டுசுட்டான் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மாசி மக மகோற்சவம் எதிர் வரும் 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 23 நாட்கள் நடைபெறும்.

அடுத்தமாதம் 10 ஆம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும். (க-113)

# வன்னி புனரமைப்பு வேலைகளுக்கு திறமைமிக்க ஊழியர்கள் தேவை

போரூட் தொழிற் பயிற்சி நிலைய திறப்பு விழாவில் உரை

வவுனியா மார்ச் 14

வவுனியா மாவட்டத்திலும் அதனைச் சார்ந்த வன்னிப் பிரதேசத்திலும் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு, புனர் நிர்மாண வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு திறமையும் பயிற்சியும் மிக்க ஊழியர்கள் தேவையாக இருக்கின்றார்கள்.

இதனை ஈடு செய்வதற்கும் சமூக அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குமாக, இளைஞர் யுவதிகளுக்குப் பயிற்சியளிப்பதற்கான தொழிற் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்''

இவ்வாறு வவுனியா இறம்பைக் குளத்தில் போரூட் நிறுவனத்தின் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றை வைபவ ரீதியாகத் திறந்து வைத்து உரையாற்றிய, போரூட் நிறுவனத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி திரு. ஆரி எரிக்சன் தெரிவித்தார்.

போரூட் வவுனியா இணைப்பாளர் திரு. எஸ். வி. சண்முகம் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வவுனியா அரசாங்க அதிபர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்ததாவது ;-

இம்மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளின் நன்மை கருதி இந்த தொழிற் பயிற்சி நிலையத்தை போரூட் நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

வடமாகாணத்திற்கான கல்வி நிலையம் ஒன்றை சகல வசதிகளையும் உள்ளடக்கியதாக ஓமந்தையில் அமைப்பதற்கு முன் வந்துள்ள போரூட் நிறுவனம், அதன் முன்னோடியாக இப்பயிற்சி நிலையத்தைத் தொடக்கி வைப்பது வரவேற்பிற்குரியதாகும்.

ஜனசக்தி உதவி பெறும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு வாய்ப்பளித்து அவர்களின் முன்னேற்றத்திற்காக இப்பயிற்சி நிலையத்தை தகுந்த முறையில் பயன்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது'' என்று தெரிவித்தார்.

போரூட் நிறுவனத்தின் நோர்வே இயக்குநர் சபை பிரதிநிதிகள் - திருமதி ரூரிட் போக்ஸ்டட் போரூட் நிறுவனத்தின் இலங்கை திட்டப் பணிப்பாளர் ஜனாப் எம்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

### நாணய மாற்று விகிதம்

12-3-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 231.56 | 232.52 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.20 | 4002.75 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6414.68 | 6437.20 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2338.38 | 2353.53 |
| 100 | பிரெஞ்சு பிராங் | [illegible] | [illegible] |
| 100 | ஜப்பானிய யென் | 26.2407 | 26.4159 |

### திருமுகம்

## கமத்தொழில் பகுதியின் கவனத்திற்கு..

சில ஆண்டுகளாக மாமரங்கள் பூச்கும் துளிர்க்கும் காலங்களில் ஒரு வித பூச்சி உண்டாகி, பூக்கள் கருகியும் இலைகள் சுருண்டும் காணப்படுகின்றது. இவற்றுக்கு மருந்து தெளிக்கும் கருவிகள் இனாமாகக் கமத்தொழில் பகுதிக்கு கொடுக்கப்பட்டதாகவும் செய்திகள் கிடைத்தும் இவற்றை உரியமுறையில் பயன்படுத்துவதாக இல்லை.

இந்த மருந்தைத் தெளிப்பதற்குச் செலவாகும் பணமும் எல்லோராலும்கொடுக்க முடிவதில்லை. அப்படிச் செய்வித்த சமயங்களிலும் அது சரியான முறையில் சரியான மேற்பார்வையில் நடைபெறவில்லை.

இதை ஒரு தேசிய சேவையாகக் கருதி அக்கறையுடன் செயற் படுத்தினால் சமுதாயம் பயனடையும்.

கமத்தொழில் பகுதி அதிகாரிகள் இவற்றைக் கவனத்திற்கு எடுக்க வேண்டும்.

மாங்காய்களை பறிப்பதற்கும் ஒரு முன்னேற்றமான விஞ்ஞான ரீதியான முறை தேவைப்படுகின்றது.

ஓர் :பிரசை
யாழ்ப்பாணம்

## விளான் கீரிமலை பெருந்தெரு

விளான் கீரிமலைப் பாதையில் நாளாந்தம் பல நூற்றுக்கணக்கான வாகனங்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. ஆயிரக்கணக்கான பிரயாணிகள் இந்தப் பாதையில் பயணஞ் செய்து வருகின்றனர். பாதையின் சீர் கேட்டினால் போக்குவரத்தில் சிரமங்கள் உள்ளன.

இப்பெருந் தெரு சில வருடங்களாக, குண்டும், குழியுமாக பழுதடைந்த நிலையில் இருந்து வருகின்றது.

இந்தப் பாதையைச் செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

வீ. ரி. சற்குணராசா
இளவாலை

## தந்தை செல்வா நினைவாக

இன்னும் ஏழு ஆண்டுகளில் அதாவது 1997 இல் தந்தை செல்வாவின் ஜனன நூற்றாண்டு விழா வருகிறது.

ஆகவே கடந்த சில ஆண்டுகளாகத் தடைப்பட்டு நிற்கும் வருடாந்த தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவுகள் மீண்டும் நடைபெறுமா?

மேலும், தந்தை செல்வாவின் வாழ்க்கை வரலாறு அவருடைய ஜனன நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களுக்கு முன்பாவது வெளியிடப்படுமா?

-இன்பரசு
யாழ்ப்பாணம்

### கண்டதும் கேட்டதும்

கோடை காலம் வந்து விட்டால் யாழ்ப்பாணத்தில் ஒரு பொருளுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டு விடுகிறது.

அது தான் செவ்விளநீர்க் குரும்பை

தற்போது ஒரு செவ்விளநீர் ஏழு ரூபா முதல் எட்டு ரூபா வரை கடைகளில் விற்கப்படுகிறது.

வீடுகளிலும் தோட்டங்களிலும் செவ்விளநீர் விலை பேசி இறக்கப்பட்டு நகருக்குக் கொண்டுவரப்பட்டு கடைகளுக்கு மொத்தமாகக் கொடுக்கப்படுகின்றது.

வீடுகளுக்குச் சென்று செவ்விளநீரை விலை பேசுபவர்கள் இத்தொழிலில் கைதேர்ந்தவர்கள் இதற்கு ஓர் உதாரணம்.

சில தினங்களுக்கு முன் யாழ் கோவில் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்கு சென்ற ஒருவர் இளநீரை ஆறு ரூபாவாக விலை பேசி இருக்கிறார்.

இந்த குலையில் ஏழு இளநீர்கள் மட்டுமே இருந்தன.

விலைபேசியவர் ஏழு இளநீர்கள் கொண்ட இக் குலைக்கு ஆறு ரூபா மட்டும் கொடுத்தார்.

தனியாக இருந்த வீட்டு உரிமையாளரான பெண் ஒரு இளநீருக்கு ஆறு ரூபாய்ப்படி 42 ரூபா கேட்ட போது பேசின பேச்சிலிருந்து மாறக்கூடாது என்று கூறி விட்டு இளநீர்க்குலையுடன் நடையைக் கட்டினார் அவர்.

செய்தி லோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

புதிய கவர்ச்சிமிக்க வெஸ்பா (Vespa) P L 170 ஸ்கூட்டர் 96 C C விற்பனைக்குண்டு. (கலனுக்கு 260 மைல் வேலை செய்யும்) முற்பணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்பு:- 3, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். (சி-3994)

## 50வது பிறந்தநாள் அஞ்சலி



### அமரர் திரு. வி. சிங்காரவேலு

(முன்னாள் அலுவலக உதவி அரச அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு)

மண்ணில்: 14 - 03 - 1940    விண்ணில்: 14 - 11 - 1984

உன் அன்பு நிறை
அரவணைப்பும்
இன்பத் தமிழின்
இனிமைப் பேச்சும்,
புன்னகைத்த
பூமுகமும்,
நீண்ட நல்ல
நிமிர் நடையும்,
யார் இனிமேல்
காட்டுவார்?

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
சகோதரசகோதரிகள்,
மற்றும் நண்பர்கள்.

466, நாவல் வீதி,
யாழ்ப்பாணம். [12032]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வேலணை மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட

### செல்வன் நவரட்ணம் நவநீதன்

அன்னை மடியில்; 04 - 09 - 1971    இறைவன் அடியில்: 14 - 03 - 1989

எங்கள் அன்புத் தெய்வமே நீதா எமக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக இருந்த நீ எங்கள் எல்லோரையும் ஆளாத்துயரில் ஆழ்த்திவிட்டு நீ மீளாத் துயில் கொண்டு ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும் மாறாது, மறையாது ஒளிசும் உன் உருவம் எம்மை விட்டு அகலாது. உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

உமது பிரிவால் வாடும்
பப்பா, அம்மா, அண்ணாமார்,
அக்காமார், அத்தான், மருமகள், அண்ணி.

77/4, புங்கங்குளம் வீதி,
கொழும்புத்துறை. [12028]

# 'கம்யூனிஸ்ட் கட்சி' என்ற பெயரை மாற்ற கோர்பச்சேவ் மறுப்பு!

## சோஷலிஸ்ட் கட்சி என்ற புதிய பெயர் நிராகரிப்பு

மாஸ்கோ, மார்ச் 13
சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பெயரை சோஷலிஸ்ட் கட்சி என்று மாற்ற ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் மறுத்து விட்டார்.

அப்படிப் பெயரை மாற்றுவது உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தைக் குழப்பத்தில் ஆழ்த்தி விடும் என்று திரு. கோர்பச்சேவ் நாடாளுமன்றத்தில் பேசுகையில் எச்சரிக்கை விடுத்தார்.

இதனிடையில்– சோவியத் ஜனாதிபதிக்கு கூடுதல் நிறைவேற்று அதிகாரங்களை வழங்கும் சட்டம் வருகிற புதன்கிழமைக்கு முன்பதாக சோவியத் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் பின்னரே தனிநாடாக சுதந்திரப் பிரகடனம் செய்துள்ள லித்துவனியா மாநிலம் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றிசோவியத் மத்திய அரசு தீர்மானிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

### பஞ்சாப் பிரச்சினை

புதுடில்லி, மார்ச் 13
பஞ்சாப் மாநிலத்தின் நிலையை நேரில் பார்த்து அறிந்து வர அனைத்து கட்சிகளின் தூதுக்குழு ஒன்றை அனுப்பும்படி மத்தியஅரசாங்கத்தை பாரதிய ஜனதாக் கட்சி கேட்டுள்ளது. (எ)

## சீன-தென்கொரியா வர்த்தக பேச்சுக்கள் துண்டிப்பு!

தென் கொரியாவுடன் வர்த்தக உறவுகளை ஆரம்பிப்பது பற்றிய பேச்சுவார்த்தைகளை இடைநிறுத்துவது என்று சீனா முடிவு செய்துள்ளது.

கொள்கை அடிப்படையில் தென் கொரிய அரசுடன் சில விஷயங்களில் இணக்கம் காணத் தவறியதையடுத்தே சீன அரசு இந்த முடிவை எடுத்தது.

வர்த்தக உறவை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து ஏற்கனவே இரண்டு சுற்றுப் பேச்சுக்களை சீனா தென் கொரியாவுடன் நடத்தியது. குறிப்பிடத்தக்கது.

## லிபியா, சூடான் அரசுகளுக்கு எதியோப்பியாவில் எதிர்ப்பு

அடிஸ் அபாபா, மார்ச் 13
எதியோப்பியாவின் உள் விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்று சூடானுக்கும் லிபியாவுக்கும் [illegible] கோள் விடப்பட்டுள்ளது.

அடிஸ் அபாபா பல்கலைக் கழக மாணவர்கள் சோவியத் யூனியன் பிரிட்டன் ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கு அனுப்பிய மகஜர்களில் தாங்கள்செல்வாக்கை இது விஷயத்தில் பாவிக்கும்படி கோரியுள்ளனர்.

எதியோப்பியாவில் தனிநாடு கோரி போராடும் எரித்திரிய டைகிரே போராளிக் குழுக்களுக்கு சூடானும் லிபியாவும் ஆயுத உதவி அளித்து வருகின்றன. (எ)

## தாட்சர் பதவி விலகவேண்டும்; ஆளும்கட்சிகள் போர்க்குரல்!

லண்டன், மார்ச் 13
பிரதமர் மார்கரட்தாட்சர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியில் வலியுறுத்தப்படுகிறது.

ஆளும் கட்சி எம்பிக்களில் கால் பங்கினர் திருமதி தாட்சர் பதவி விலக வேண்டும் என்று விரும்புவதாக ஞாயிறு பத்திரிகைகள் நடத்திய கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

1992 நடுப்பகுதியில் பிரிட்டனின் அடுத்த பொதுத் தேர்தல் வருகிறது. அதற்கு முதல் திருமதி தாட்சர் பதவி விலகினால்தான் இழந்து வரும் செல்வாக்கைக் கட்டி எழுப்பி தேர்தலில் மீண்டும் வெற்றி பெறலாம் என்று கன்சவேட்டிவ் கட்சியினர் அபிப்பிராயப்படுகின்றனர்.

தொழிற்கட்சியிலும் பார்க்க 19 சதவீதத்தால் கன்சர்வேட்டிவ் கட்சியின் செல்வாக்கு வீழ்ச்சி அடைந்துள்ளதாக கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன (எ)

### பாகிஸ்தானில் பத்து பேர் பலி

இஸ்லாமபாத், மார்ச் 13
பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் மீண்டும் வெடித்த இனக்கலவரத்தில் பத்துப் பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## போராளிகளுக்கு மன்னிப்பு ஈராக் ஜனாதிபதி அறிவிப்பு

பக்தாத் [illegible]
தனி நாடு கோரி ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள அனைத்து குர்டிஷ் இனப் போராளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவதாக ஈராக் ஜனாதிபதி சதாம்ஹுசேன் அறிவித்தார்.

இந்தப் பொதுமன்னிப்பு இரண்டு மாதங்களுக்கு நீடிக்கும்.

இதன் கீழ் ஏனைய நாடுகளில் புகலிடம் பெற்றுள்ள குர்டிஷ் போராளிகள் தாயகம் திரும்புவதற்கான உதவிகள் செய்துகொடுக்கப்படும் என்றும் ஜனாதிபதிஹுசேன் அறிவித்தார்.

குர்டிஷ் பிரதேசத்துக்கு சுயாட்சி வழங்கும் பிரகடனம் வெளியிடப்பட்ட 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடு முகமாக இந்த பொது மன்னிப்பு வழங்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

இப்பிரகடனம் 11. 3. 1970 இல் வெளியிடப்பட்டது.

குர்டிஷ்இன் நாடாளுமன்றத்தில் அதன் தலைவர் பஹடின் அஹ்மத் பொதுமன்னிப்பு வழங்கும் திட்டத்தை அறிவித்தார்.

துருக்கியில் 20 ஆயிரம் குர்டிஸ் அகதிகள் இருக்கிறார்கள். ஈரானில் தஞ்சமடைந்த குர்டிஷ் அகதிகளின் எண்ணிக்கை தெரியவில்லை. (எ)

## 31ம் நாள் நினைவஞ்சலி



வீரவேந்தன்

### வீரமுத்து தெய்வேந்திரம்பிள்ளை J. P.

(ஓய்வு பெற்ற அதிபரும், சமாதான நீதிபதியும்)

தோற்றம்: 03 - 05 - 1916    மறைவு: 12 - 02 - 1990

அன்பின் உறைவிடமாய் பண்பின் பாசத்தின் நிறைவிடமாய் எம்மை வளர்த்தெடுத்து வளமுடன் வாழ வழிவகுத்து அழியாத ஓவியமாய் எம் நெஞ்சங்களில் நிலைத்துவிட்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இவ்வண்ணம்
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'தங்கநிலையடி'
வட்டுக்கிழக்கு.
சித்தன்கேணி. [2780]

MCC
11B, Momsac Building,
Stanley Road,
JAFFNA.

I. A. B. (London)
(All Stages)
By
K C. Satiyamoorthy
From: 15-03-90

Also At:
Wellknown Centre
Station Road,
KONDAVIL.
[C-3482]

பகுதி நேர [Part Time]

## அச்சக ஊழியர் தேவை

கொம்போஷிங் – பைன்டிங் – கட்டிங்
மற்றும் சகல அச்சக வேலைகளிலும் அனுபவம் உள்ளவர்கள் பகுதிநேர வேலைக்குத் தேவை.

வேலைநேரம்: பிற்பகல் 5.30 – நள்ளிரவு 12.00 மணி
அல்லது ஒப்பந்த அடிப்படையில் செய்யலாம்.

நேரில் தொடர்பு கொள்ளும் நேரம்:
வேலை நாட்களில் மாலை 5. 00 - 7. 00 மணி
சனி / ஞாயிறு: காலை 9. 00 மாலை 6. 00 மணி

இல: 15, 2ம் ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## உங்கள் தேவை! எங்கள் சேவை!!

★ தரமான
★ தெளிவான
★ சிக்கனமான

தமிழ், ஆங்கில தட்டச்சு றோணியோ வேலைகளுக்கு

* * *

"ஷிறா" (சேவைப் பகுதி)

இல. 19. 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

உ
சிவமயம்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



அன்புடையீர்!

15 - 02 - 1990 வியாழக்கிழமை

இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி

### திருமதி இராமலிங்கம் நாகலக்சுமி (மணி)

அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் 16 - 03 - 1990 வெள்ளிக்கிழமை காலை இருக்கேதீஸ்வரம் பாலாவிக் கரையிலும், வீட்டுக் கிருத்தியம் 17 - 03 - 1990 சனிக்கிழமை பகல் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்!
வி. இராமலிங்கமும் பிள்ளைகளும்.

பாப்பாமோட்டை,
திருக்கேதீஸ்வரம் (11891)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கைத்தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்.
அரசாங்க மரவேலைப் பயிற்சிப் பாடசாலை
பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு

## அறிவித்தல்

யாழ் மாவட்டத்திலுள்ள சிறு கைத்தொழில் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் யாழ்ப்பாணம், மானிப்பாய் இயந்திர சாதன மரவேலைப் பாடசாலைக்கு புதிய பயிற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களை ஆண் / பெண் இரு பாலாரிடம் இருந்தும் திணைக்களம் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் 14—25 வயதுக்குட்பட்டவராயும் எட்டாம் வகுப்புக்கு குறையாத தராதரமுடையவராகவும் இருப்பது அவசியம். பயிற்சிக்காலம் 1 வருடமாகும். பயிற்சிக் காலத்தில் நாளொன்றுக்கு ஊக்குவிப்புப் படியாக பதினைந்து ரூபா வழங்கப்படும்.

விண்ணப்பமுடிவுத் திகதி 22 - 03 - 90 சகல விண்ணப்பங்களும் உதவிப் பணிப்பாளர், சிறு கைத்தொழில் திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம் என அனுப்பப்படல் வேண்டும்.

உதவிப் பணிப்பாளர் / சிறு கைத்தொழில்
யாழ் அரச அதிபருக்காக

யாழ்ப்பாணம். [சி-3999]

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
இராஜலிங்கம் மோகனேஸ்வரி

மலர்வு: 20 - 07 - 1939    உதிர்வு: 01 - 04 - 1987


எமது குடும்பத்தின் தலைவியாகவும், பாசத்தின் உறைவிடமாகவும் திகழ்ந்து எம்மையெல்லாம் வழி நடாத்திய அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மையெல்லாம் பிரிந்து ஆண்டுகள் மூன்று மறைந்தாலும் எங்கள் நெஞ்சத்தில் அணையாச் சுடராக என்றென்றும் ஒளிவீசும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவன், பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

42, சபாபதி வீதி,
கொக்குவில். [12043]

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

நன்றி நவிலல்



மலர்வு: 21 - 03 - 1929

உதிர்வு: 12 - 02 - 1990

உரும்பிராய் கிழக்கு
அமரர் (ராஜா)
வேலுப்பிள்ளை பரமநாதன்

என் உடன் பிறப்புக்களில் எழுவரை இழந்தேன் என்னுடன் நீ ஒருவன் இருக்கிறாய் என்றிருந்தேன் என்னைத் தனியே விட்டு நீயும் சென்று விட்டாய் ஒன்பதில் ஒருத்தியாய் நான் தவித்து நிற்கின்றேன் தொலைவிலே உள்ள லண்டனுக்கு தொலைபேசியிலே நான்பேசினேன், மரணப் படுக்கையிலேயே பதிலுகள் கிடைத்தனவே மங்காத குரல் என் செவிதனிலே விழ்ந்ததுவே அவை என்றும் என் மனதில் நிலையாக நிற்கிறதே நான் இன்று தனியாக நிற்கின்றேன், ஆனால் உனது சொந்த மண்ணின் உன் இல்லத்தில் நிழற் படத்தை வைத்து விளக்கேற்றி நான் வணங்குகின்றேன்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அமரர் ராஜா வேலுப்பிள்ளை பரமநாதன் அவர்களின் பிரார்த்தனை வைபவத்தில் கலந்து கொண்ட அனைவர்களுக்கும் நன்றிகள்.

திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரை
சகோதரி

ராஜபவனம்,
ஞானவைரவர் கோயில் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (2786)

## வானொலி நிகழ்ச்சிகள் 14- 3- 1990

| | |
|---|---|
| 5.00 | நாதாஞ்சலி |
| 5.05 | தோத்திரமாலை |
| 5.30 | பாமாலை |
| 5.45 | சைவ நற்சிந்தனை |
| 5.50 | இஸ்லாமிய நற்சிந்தனை |
| 5.55 | போதிமாதவனின் போதனைகள் |
| 6.00 | வர்த்தக சேவை |
| 6.30 | செய்திகள் |
| 6.40 | செய்தித்தாள் கண்ணோட்டம் |
| 7.00 | வர்த்தக சேவை |
| 7.30 | பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி |
| 7.45 | மாகாணச் செய்திகள் |
| 7.50 | வர்த்தக சேவை |
| 8.00 | வயலின் |
| 8.15 | மெல்லிசைப்பாடல்கள் |
| 8.30 | மாதர் மஜ்லிஸ் |
| 9.00 | வர்த்தக சேவை |
| 10.00 | இசையமுதம் |
| 10.30 | கிளாரினட் |
| 11.00 | புல்லாங்குழல் |
| 12.00 | வர்த்தக சேவை |
| 12.45 | செய்திகள் |
| 1.00 | வர்த்தக சேவை |
| 6.00 | செய்திகள் |
| 6.15 | அருளமுதம் |
| 6.30 | மெல்லிசைப்பாடல்கள் |
| 7.00 | களத்துமேடு |
| 7.15 | கதம்பம் |
| 7.45 | வாத்திய இசை |
| 7.50 | உலகச் செய்திகள் |
| 8.00 | முஸ்லிம் நிகழ்ச்சிகள் |
| 9.00 | செய்திகள் |
| 9.20 | பக்திப் பாடல்கள் |
| 9.30 | கலைப் பூங்கா |
| 10.00 | இசைக் கச்சேரி |
| 10.45 | பஜன் |
| 11.00 | ஒலிபரப்பு முடிவு. |

## படை இறுதி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கல் சம்பந்தமான திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என புதுடில்லியில் தெரிவிக்கப்பட்டது.

புதுடில்லி சென்றிருக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதர் எல். எல். மெஹ்ரோத்ரா இறுதிப்படை விலகல் சம்பந்தமான திகதி நிர்ணயிக்கப்பட்டதும் அதுபற்றி இலங்கை வெளிவிவகார அமைச்சர் திரு.ரஞ்சன்விஜேரத்தினாவுக்கு தொலைபேசி மூலம் அறிவிப்பார் என முன்னர்தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இறுதிப்படை விலகல் சம்பந்தமான திகதி குறித்து இன்னமும் தீர்க்கமான முடிவு எடுக்கப்படாததால் அதுபற்றி இதுவரை இலங்கை அரசுக்கு உத்தியோகபூர்வமாக எதுவிதஅறிவித்தலும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

மாலைதீவுக்குச் சென்றிருந்த இந்தியப் படை அங்கிருந்து வாபஸ்பெறப்பட்டபோது அந்நிகழ்ச்சி கோலகலமான முறையில் நடைபெற்றது தெரிந்ததே.

அதே நடைமுறையை இலங்கை விடயத்திலும் பின்பற்ற இந்திய வெளியுறவுத் துறை விரும்புவதாகத் தெரிகிறது.

ஆனால் இலங்கையின் பிற இடங்களில் இருந்து இந்தியப் படை விலகியது போன்று திட்டவட்டமான முன்னறிவிப்பு, பெரிய அளவில் பிரியாவிடை வைபவங்கள் ஏதுமின்றி திடீரென படையை விலக்கிக்கொள்ள இந்திய இராணுவப்பிரிவு விரும்புவதாகக் கூறப்படுகிறது. (உ-எ)

## நாளைக்கு-----

(1ம்பக்கத்தொடர்ச்சி)

வெற்றிடங்களுக்கு ஏற்பவே இந்த நியமனங்கள் வழங்கப்பட உள்ளன.

இந்தநியமனங்கள் தொடர்பாக வடக்கு கிழக்குப் பகுதியில் இருந்து ஓரிரு முறைப்பாடுகளே இதுவரை எமக்குக் கிடைத்துள்ளன. அம்பாறை மாவட்டத்தில் 1163நியமனங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன. தற்போது வழங்கப்படவுள்ள நியமனங்களில் முஸ்லிம்கள் 524பேரும் தமிழர்கள் 2608 பேரும் அடங்குவர். மாவட்ட ரீதியாக யாழ் மாவட்டத்தில் 1034 பேரும், கிளிநொச்சியில் 238 பேரும், மன்னாரில் 278 பேரும், வவுனியாவில் 379 பேரும், முல்லைத்தீவில் 262 பேரும், மட்டக்களப்பில் [illegible] பேரும், திருகோணமலையில் 874 பேரும் நியமனம் பெற [illegible] (இ-2)

## நாளை நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராசா எழுதிய "வித்துவசிரோமணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும்" என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை 15 ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப. 3 மணிக்கு பல்கலைக்கழக கைலாசபதிகலையரங்கத்தில் நடைபெறும்.

தமிழ் மன்றத் தலைவர் விறிம்ராஜ் ரவிச் சந்திரா பிலைமை வகிக்கும் இந்த தழாவை துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா மங்கல விளக்கேற்றித் தொடக்கி வைப்பார்.

வரவேற்புரையை விரிவுரையாளர் மா. வேதநாதனும், வாழ்த்துரையைக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் நா. பாலகிருஷ்ணனும் வெளியீட்டுரையை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் கவிஞர் இ. முருகையனும் நிகழ்த்துவார்கள். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகச் சிறப்பாய்வாளர் திரு. க. வீரகத்தி கருத்துரை வழங்குவார்.

நூலின் முதற் பிரதியை ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. க. கதிரவேற்பிள்ளையும் சிறப்புப் பிரதியை டை பிராந்திய இ.போ.ச. தலைவர் திரு எஸ். கனகரத்தினமும் பெறுவார்கள்.

நாட்டியகலாகேசரி வளுவூர் இராமையாப்பிள்ளையின் மாணவி திருமதி.கல்யாணி சுந்தரலிங்கத்தின் மாணவி வழங்கும் நடன நிகழ்ச்சியும் விழாவில் இடம்பெறும்.

தமிழ்மன்றச் செயலாளர் திரு.க. ரவீந்திரன் நன்றியுரை கூறுவார்.

## ஆறாவது திருத்தத்தை--

(1ம்பக்கத்தொடர்ச்சி)

அது இருக்கும். மாகாண சபையை உருவாக்கியதால் உருப்படியான பயன் ஏதும் ஏற்படவில்லை. மாகாண சபையை கலைப்பதற்கான உருப்படியான நியாயங்களும் இப்போது இல்லை.

கேள்வி :- தமிழ் ஈழப் பிரகடனம் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸின் கருத்து என்ன?

பதில் :- இதனை ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்தினர் செய்துள்ளதால் திரு. ரஞ்சன் விஜேரத்தின இதற்காகச் சிரிக்கிறார். ஒரு நாட்டைப் பிரித்து அதன் பகுதியை தனி நாடாகப் பிரகடனப்படுத்துவது என்பதைச் சாதாரண விடயமாகக் கருதக் கூடாது.

இதனை திரு. வரதராஜ பெருமாள் செய்திருக்கும் முறை ஓர் அரசியல் முதிர்ச்சியற்ற தன்மையாகும் இதில் வேடிக்கை என்னவென்றால் இப் பிரகடனத்தை நிபந்தனைகளுடன் செய்திருப்பதாகும். முஸ்லிம் காங்கிரஸ் இவ்விடயத்தில் திரு. வரதராஜப்பெருமாளையோ அவரது கருத்தையோ முக்கியமாகக் கருதவில்லை. நாடு பிரிபடும் அபாயம் இருக்கிறது என்பதையே முஸ்லிம் காங்கிரஸ் உணர்கிறது.

வரதராஜப்பெருமாள் ஈழப் பிரகடனம் செய்ததினைப் பற்றி சிரிக்கும் அரசாங்கம், நாளை பிரபாகரன் ஈழப் பிரகடனம் செய்தால் என்ன செய்யப்போகிறது என்பதனைத் தெளிவாக விளக்க வேண்டும் எனக் கோரியிருக்கிறோம்.

கேள்வி:- தமிழ் தீவிரவாதக் குழுக்கள் முஸ்லிம்களுக்காக குரல் எழுப்புவதை முஸ்லிம் காங்கிரஸ் எதற்காக எதிர்க்கிறது? ஜனநாயக வழிமுறைக்கு வரும் எந்தக் குழுவும் முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்க முடியும் அல்லவா?

பதில்:- ஆயுதம் தாங்கிய தமிழ் குழுக்களோ, ஆயுதம் தாங்காத குழுக்களோ முஸ்லிம்களுக்காக குரல் எழுப்புவதை நாங்கள் எதிர்க்கவில்லை.

நாங்களும் மலையக மக்களுக்காகவோ, ஒடுக்கப்படும் மக்களுக்காகவோ குரல் எழுப்ப முடியும்.

ஆனால் நாங்கள் மலையக மக்களின் பிரதிநிதிகள் என்று ஒருபோதும் சொல்லவில்லை. யாரும் பேசலாம். குரல் கொடுப்பது என்பது பிரச்சினை அல்ல. ஆனால் பிரதிநிதிகள் யார் என்பதே இங்கு முக்கியம்.

கேள்வி :- மாகாண சபை கலைக்கப்பட்டால் அதன்பின் முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கில் என்ன செய்வதாக உத்தேசித்துள்ளது?

பதில்:- முஸ்லிம் காங்கிரஸ் என்பது மாகாணசபை அல்ல. அது முஸ்லிம் சமுதாயத்தின் குரல்; அதன் சின்னம்; விடுதலையின் போராட்டம். முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்து இயங்கும்.

கேள்வி:- இந்திய இராணுவம் முற்றாக வெளியேறி வரும் நிலையில் வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களின் நிலை எப்படியிருக்கிறது?

பதில்:- முஸ்லிம்களின் நிலையை இந்தியப் படையுடன் மட்டும் தொடர்புபடுத்திப் பார்க்கக்கூடாது. இந்தியப்படை வருவதற்கு முன்பும் பின்பும் முஸ்லிம்களின் நிலைமை பாதிக்கப்பட்டே வந்திருக்கிறது. விடுதலைப் புலிகளினால் கடத்திச் செல்லப்பட்ட பல முஸ்லிம் இளைஞர்களைப்பற்றி இன்னமும் தகவல்கள் தெரியவரவில்லை.

கேள்வி:- இலங்கை முஸ்லிம்களின் நிலை தொடர்பாக இஸ்லாமிய நாடுகளுக்கு எடுத்துக் கூறும் முகமாக நீங்கள் மேற்கொண்ட சுற்றுப்பிரயாணம் பற்றி...?

பதில்:- இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்தியதால் தான் விடுதலைப் புலிகள் முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்படும் தமது நடவடிக்கையை குறைத்துக் கொண்டுள்ளனர்.

சர்வதேசப் பத்திரிகைகளும், செய்தி நிறுவனங்களும் இந்த நடவடிக்கை புலிகளைப் பின்வாங்கச் செய்திருப்பதாக விமர்சனம் செய்துள்ளன. முஸ்லிம்களின் சர்வதேசப் பலம் புலிகளுக்கு இதனால் விளக்கப்பட்டுள்ளது. (அ-உ-2)

## வன்னி---

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

எப். மரிக்கார் வவுனியா திட்டப் பணிப்பாளரும், புனர் வாழ்வுத் திணைக்களத்தின் வவுனியா மாவட்ட உதவி பணிப்பாளருமான திரு. எஸ். ரங்கராஜன் ஆகி[illegible] கலந்து கொண்டு உரையாற்[illegible] றினார்கள். (உ-161)

## 14பேர். . .

(1ம் பக்கத்தொடர்ச்சி)

லூரியைச் சேர்ந்த வனஜாராணி கண்ணுத்துரை, சீதா தாமோதரம்பிள்ளை ஆகியோர் மருத்துவத்துறையில் 4 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றனர்.

யாழ் மத்திய கல்லூரிமாணவனான கே. சத்தீஸ்காந்தன் பொறியியல் துறையில் 4 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றார்.

சென் பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஜே. எல். ஸ்பென்சா புறூறோ விஞ்ஞான பிரிவில் 4 பாடங்களிலும் 'ஏ' பெற்றார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த பி. வரகுணன், கே. அமிர்தகுமார் ஆகியோர் பொறியியல் துறையிலும் கே. சிவராமன் மருத்துவத்துறையிலும் 4 'ஏ' பெற்றுள்ளனர்.

பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரியைச் சேர்ந்த வாசுகி கணபதிப்பிள்ளை மருத்துவத்துறையில் 4 பாடங்களிலும் 'ஏ' பெற்றுள்ளார். (இ-3)

## ஹங்கேரியில் சோவியத் படை

ஹங்கேரியில் இருந்து கடைசி சோவியத்துருப்பு எப்போது வெளியேறும் என்பது பற்றிய விஷயத்தில் இருநாடுகளும் உடன்பாடு கண்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

## இன்று

கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் லங்கா சீமெந்து நிறுவனக் கிளையின் 2 ஆவது பொதுக் கூட்டம் லங்கா சீமெந்து நிறுவன மின்வலு நிலைய மண்டபத்தில் தலைவர் [illegible] கே. ஜோர்ஜ் பாலா தலைமையில் இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

## காணவில்லை

மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் வசிப்பவருமாகிய சபாரெட்ணம் சர்மிளா (சுமதி) 10 வயது இச் சிறுமியை கடந்த 23-02-1990 முதல் காணவில்லை காணாமல் போன அன்று பச்சை நிற சட்டை அணிந்திருந்தார் இவரைப்பற்றிய தகவல் தெரிந்தவர்கள்.

பொ. நாகராசா (பத்தர்)
628/3A கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு உடன் அறிவிக்கவும். (12042)

## யாழ்/பிராந்திய வருடாந்த பொதுக்கூட்டம்

மானிப்பாய் இந்துக்கல்லூரி
மானிப்பாய்

சகல வசதிக் கட்டண ஆசிரியர்களுக்கான வருடாந்தப் பொதுக் கூட்டம் 1990 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 16 ஆம் திகதி பி. ப. 12.30 மணிக்கு மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறும். தயவு செய்து அங்கத்தவர்கள் யாபேரும் பிரசன்னமாயிருக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறேன்.

12 - 03 - 90

எஸ். வி. விக்கிரமசிங்கம்
தலைவர்
[2785]

யாழ்ப்பாண மாநகரசபை

## நீர் விநியோக இடை நிறுத்தம்

நீர் பிரிவிடுதல் சம்பந்தமாக பிரதான நீர் குழாயில் திருத்த வேலைகள் செய்யவேண்டியுள்ளது. இதன் காரணமாக 15 - 03 1990 ஆம் திகதி தொடக்கம் ஒரு வார காலத்திற்கு பிரதான தாங்கி மூலமான நீர் விநியோகம் இடை நிறுத்தப்பட்டுள்ளது என்பதனை வருத்தத்துடன் பொது மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

வி. பி. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை, அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
13. 03. 1990 [சி-3445]

## நன்றி நவிலல்

செல்வன்
மகாலிங்கம் காண்டீபன்

எமது மகன் செல்வன் மகாலிங்கம் காண்டீபன் கடந்த 04 - 03 - 1990 அன்று விபத்தில் படுகாயம் அடைந்து யாழ் / போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபோது சகல வகைகளிலும் உதவிய அதிகாரிகள், வைத்தியர்கள், தாதிமார், மற்றும் ஊழியர்களுக்கும், அவர் நலம் பெற மனதாரப் பிரார்த்தித்த அன்புள்ளம் படைத்தோர்க்கும் பல வகைகளிலும் உதவிய பாடசாலை மற்றும், விடுதலைப் புலிகள் உறுப்பினர், நண்பர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும் அவரது மரணச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

பெற்றோர், சகோதரிகள்-
(2789)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

"அழைப்பின் குரல் கேட்டேன்
என் ஆண்டவர் என உணர்ந்தேன்"



திருமதி திரேசம்மா யோசராசா
(செல்வ புஸ்பம்)

தோற்றம்: 14 - 09 - 1929    மறைவு: 12 - 02 - 1990

எங்கள் குடும்ப விளக்கொளி அணைந்தது.
எம் குலத்தின் பாசக் குரல் மறைந்தது.
எத்தனை காலங்கள் சென்றாலும்
எம் நெஞ்சங்கள் உம்மை மறக்குமோ?
நமது உள்ளக் கோவிலில் என்றும்
வீற்றிருக்கும் அன்புத் தெய்வத்தின்
ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

இவரது பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள், உறவினர்.

மண்குழி வீதி,
ஊர்காவற்றுறை. [2788]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

★ வர்ண நிழற்பட பிரதி ஒன்று 5/90
★ Processing செய்தல் இலவசம்,
★ விற்பனை-வர்ண நிழற்பட சுருள்கள்,
★ பட அல்பங்கள், பெற்றறிகள்

பெற்றுக் கொள்ள நாடுங்கள்:

# உதயன்

14 - 03 - 1990 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகளை
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## எதிரணியின் திருத்தம் சபையில் நிறைவேற்றம்

கொழும்பு, மார்ச் 14

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பௌத்த சாசனம் தொடர்பான சட்ட மூலத்திற்கு எதிர்க்கட்சி கொண்டுவந்த திருத்தம் பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

எதிரணி எம். பி. திரு. தினேஷ் குணவர்த்தனா கொண்டுவந்த திருத்தமே நிறைவேறியது.

இந்தத் திருத்தத்தைத் திடீரென சபாநாயகர் வாக்கெடுப்புக்கு விட்டபோது எதிரணிக்குச் சாதகமாக 44 வாக்குகளும் ஆளும்கட்சிக்குச் சார்பாக 38 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஆளும்கட்சி எம். பிக்கள் பலர் நாடாளுமன்றத்திற்குச் சமூகமளிக்கத் தவறியதாலேயே எதிரணி வெற்றிபெற்றது. (உ)

## இந்தியாவிலிருந்து திரும்பிய குடும்பங்களுக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மார்ச் 14

இந்தியாவில் இருந்து அரசாங்க செலவில் நாடு திரும்பிய 125 அகதிக் குடும்பங்களுக்கு மீதிக் கொடுப்பனவுகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வழங்கப்பட இருக்கின்றன.

இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் இக்கொடுப்பனவு வழங்கப்படும்.

இந்த நிவாரணத்தைப் பெற கடிதம் கிடைத்தவர்கள் மட்டுமே சமுகமளிக்க வேண்டும் என்று அரசாங்க செயலகம் அறிவித்துள்ளது.

### மணிப்பூர் சட்டசபை ஆளும் கட்சியின்

## எம். எல். ஏக்கள் 32 பேரில் 25 பேருக்கு மந்திரி பதவி!

### ஆட்சியைக் காப்பாற்ற அந்தரிக்கும் முதல்வர்

இம்பால் மார்ச் 14

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் கடந்த பெப்ரவரி 12 இல் சட்டசபைத் தேர்தல் நடந்தது.

மொத்தம் 60 உறுப்பினர்களைக் கொண்ட இச் சட்டசபையில் ஜனதாதள் தலைமையிலான ஆளும் கூட்டணிக்கு 32 ஆசனங்கள் கிடைத்தது.

அதனைத் தொடர்ந்து ஜனதாதள் கூட்டணி பதவி ஏற்றது.

முதலமைச்சராக பதவி ஏற்ற மணிப்பூர் மக்கள் கட்சித் தலைவர் ரன்பீர்சிங்குக்கு ஆட்சியைக்காப்பாற்றிக் கொள்ள எம். எல். ஏக்களைத் திருப்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால் 25 எம் எல். ஏக்களுக்கு அமைச்சர், உதவி அமைச்சர் பதவிகள் கொடுக்கப்பட்டன.

ஆக ஏழு எம். எல். ஏக்களே அமைச்சர் பதவி பெறாதவர்களாக இருக்கின்றனர்.

இவர்களும் இப்போது அமைச்சர் பதவி தரும்படி கோரி முதல்வரை வற்புறுத்தி வருகிறார்கள்.

இவர்களில் மூன்றே மூன்று பேர் ஆதரவை வாபஸ் பெற்றாலும் கூட ஆட்சி கவிழும் நிலை உள்ளது.

இந்த ஏழு எம். எல். ஏக்களும் "எங்களுக்கு மந்திரி பதவி தருகிறீர்களா? அல்லது ஆட்சியைக் கவிழ்க்கட்டுமா?" என்று மிரட்டுகிறார்கள் என புதுடில்லிச் செய்தி தெரிவிக்கிறது. (உ-எ)

எமது இன்றைய வெளியீடுகள்

[1] பாண்டியராஜன் - நிரோசா - S. S.சந்திரனின்
பச்சைக் கொடி (ஒறிஜினல்)

[2] தியாகராஜன் - ரூபினி - கவுண்டமணியின்
சேலம் விஷ்ணு (ஒறிஜினல்)

எமது நாளைய வெளியீடு

ராம்கி - கௌதமி - கவுண்டமணியின்
பெண் புத்தி முன் புத்தி (ஒறிஜினல்)

வீடியோ விமல்

117. மானிப்பாய் வீதி, ஐந்து சந்தி (மேல் மாடி)
யாழ்ப்பாணம். [11996]

மானிப்பாய்
மருதடி விநாயகர் ஆலயம்

இவ் ஆலயத்தில் மகோற்சவகாலத்தில் தற்காலிகக் கடைகளை அமைக்கும் வியாபாரிகளுக்கு இடம் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. கடைகளுக்கு இடம் பெற விரும்புவோர் எதிர் வரும் மார்ச் 17ம் திகதி காலை 10மணிக்கு மேற்படி ஆலயத்திற்குச் சமுகம் தரவும். நிர்ணயிக்கப்படும் வாடகைப் பணம் முழுவதையும் முற்பணமாகக் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொண்ட பின்பே உரியவர்களுக்கு இடம் கொடுக்கப்படும். எக் காரணங்கொண்டும் பகுதிப்பணம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மானிப்பாய்
விநாயகர் ஆலய தர்ம கர்த்தா சபை.

[2790]

## கல்முனையில் சூட்டுச் சம்பவம் பிரச்சினை சுமுகமாகத் தீர்வு

கொழும்பு, மார்ச். 14

கல்முனை பொலீஸ் நிலையத்துக்கு முன்பாக இருந்த வீதித்தடையை அகற்றுவது தொடர்பான நடவடிக்கைகளின் போது சில பொலீஸார் மேலதிகாரிகளின் உத்தரவை மீறி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

எனினும் விடுதலைப்புலிகளின் உயர் பீடத்துக்கும் பொலீஸ் உயரதிகாரிகளுக்கும் இடையில் பரஸ்பரபுரிந்துணர்வின் அடிப்படையில் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டது. வீதித்தடையும் அகற்றப்பட்டது.

நேற்று நடைபெற்ற இந்த துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பொலீஸ் உயரதிகாரிகளுடன் இணக்கம் காணப்பட்ட பின்னரே வீதித் தடை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் —

அப்போது உயரதிகாரிகளின் உத்தரவையும் மீறி சில பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## நகரப் பாடசாலைகளில் கிடைத்த பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

நேற்று வெளியானஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளில் யாழ் நகரப் பாடசாலைகளுக்கு கிடைத்த சிறப்புப் பெறுபேறுகள்வருமாறு:-

★ யாழ் இந்துக்கல்லூரி:- 4 ஏ பெற்றவர்கள் -4 பேர். 3ஏ, பி பெற்றவர்கள் - 3 பேர்.
★ சென் ஜோன்ஸ்:- 4 ஏ -2 பேர், 3 ஏ- 2 பேர்.
★ சென் பற்றிக்ஸ்:- 4ஏ- ஒருவர், 2 ஏ, 2 பி- 4 பேர்.
★ வேம்படி மகளிர்:- 4 ஏ- 2 பேர்.
★ மத்திய கல்லூரி:- 4 'ஏ' - ஒருவர்,
★ வைத்தீஸ்வரா:- 2 ஏ பி, ஸி- ஒருவர். 2 ஏ, பி, எஸ்- ஒருவர்.
★ கனகரத்தினம் ம. வி:- 1ஏ. 3பி ஒருவர். 2ஏ 2பி - ஒருவர்.
★ சுண்டுச்குளி மகளிர்:- 2ஏ, 2பி - 2 பேர். 2ஏ பி, ஸி- 2 பேர்.
★ யாழ் கன்னியர் மடம் (ஆங்கிலம்):- 1ஏ, 2பி- ஒருவர், 1ஏ, 2பி 1ஸி- ஒருவர்.
★ ஒஸ் மானியா:- 2ஏ, 2ஸி ஒருவர்.
★ கொக்குவில் இந்து:- ஏ, பி, 2ஸி 7 பேர்.
★ யாழ் இந்து மகளிர்:- ஏ, 2பி. ஸி, -2 பேர். 3பி, ஸி- ஒருவர், ஏ, பி, 2ஸி - ஒருவர்.
★ சன்மார்க்க வித்தியாலயம்:- ஏ,பி, ஸி, எஸ்- ஒருவர். (உ-3)

## நகருக்கு வெளியேயுள்ள பாடசாலைகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 14

நகருக்கு வெளியேயுள்ள பாடசாலைகளில் கிடைத்த சிறப்புப் பெறுபேறுகள் வருமாறு:-

ஹாட்லிக் கல்லூரி : 4ஏ - 3பேர், 3ஏ, பி - 6 பேர், 3ஏ, ஸி - 3பேர்.

வட இந்து மகளிர்:- ஏ, 2பி, ஸி - ஒருவர்.

பருத்தித்துறை மெதடிஸ்:- 4ஏ - ஒருவர், 3ஏ, பி - இருவர், 2ஏ, 2பி - இருவர்.

நெல்லியடி ம. ம. வி:- ஏ, 3பி - ஒருவர், ஏ,பி,2ஸி - இருவர்.

கரவெட்டி இருதயக்கல்லூரி: 2பி, 2ஸி - ஒருவர்.

கரவெட்டி விக்னேஸ்வரா:- ஏ, 3பி - இருவர், ஏ, 2பி, ஸி - ஒருவர், ஏ,பி,2ஸி - மூவர்.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி:- ஏ,பி,2ஸி - ஒருவர்.

புத்தூர் சோமஸ்கந்தா :- ஏ,பி,2ஸி - ஒருவர்.

அச்சுவேலி சென் திரேசா:- ஏ,2ஸி,எஸ் - ஒருவர்.

சுன்னாகம் ஸ்கந்தா :- 2ஏ,பி,ஸி - ஒருவர், ஏ,3பி - ஒருவர்.

மருதனாமடம் இராமநாதன் கல்லூரி:- 2ஏ,பி,ஸி - ஒருவர்.

உடுவில் மகளிர்:- 2ஏ,பி, ஸி - இருவர், ஏ,2பி,ஸி - ஒருவர்.

மானிப்பாய் இந்து :- ஏ,பி,2எஸ்-2பேர், ஏ.2பி,எஸ் - ஒருவர்.

மகாஜனக் கல்லூரி:- 2ஏ,பி,ஸி - ஒருவர், 2ஏ,2பி - ஒருவர்.

நடேஸ்வராக் கல்லூரி :- 3ஏ,பி - ஒருவர், 2ஏ,பி,எஸ் - இருவர்.

தெல்லிப்பழை யூனியன் :- 2ஏ,2பி - ஒருவர், 2ஏ,ஸி,எஸ் - ஒருவர்.

## ரெலோவின் தூதுக்குழு மந்திரி ஹமீதுடன் பேச்சு

கொழும்பு, மார்ச் 14

தமிழ் ஈழவிடுதலை இயக்கத்தின் (ரெலோ) தூதுக்குழு ஒன்று அமைச்சர் ஏ சி.எஸ். ஹமீதை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

வடக்கு, கிழக்கு மாகாண இணைப்புக்கான சர்வசன வாக்கெடுப்பு, வடக்கு- கிழக்கில் குடியேற்றம், ஆறாவது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை நீக்குவது, மாகாண சபைக்குத் தேர்தல் நடத்துவது ஆகிய விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தையின் போது இரு தரப்பாரும் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

ரெலோ தூதுக்குழுவுக்கு திரு. சிறிகாந்தா தலைமை வகித்தார். (அ)

## திருமலை நகரிலிருந்து இந்தியப்படை வாபஸ்!

திருகோணமலை, மார்ச் 14

திருகோணமலை நகரில் இருந்து நேற்று இந்திய அமைதிப்படையினர் முற்று முழுதாக வாபஸாகினர்.

அங்கு நிலைகொண்டிருந்த சிறிய எண்ணிக்கையிலான படையினர் மூட்டை முடிச்சுக்களுடன் சீனக்குடாவைச் சென்றடைந்தனர்.

சீனக்குடாவில் தங்கியிருக்கும் படையினர் அனைவரும் மிக விரைவில் தாயகம் புறப்பட்டு விடுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

## பாக்.மந்திரி கொழும்புக்கு

கொழும்பு, மார்ச் 14

பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஜனாப் யாகுப் கான் நேற்று கொழும்பு வருவார் என எதிர்பார்க்கப்பட்டது.

## கிளிநொச்சி ---

(1ம்பக்கத்தொடர்ச்சி)

கடிதங்கள் வழங்கப்படும்.

தெரிவு செய்யப்பட்டவர்களை குறிப்பிட்ட நேரங்களுக்கு கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் கேட்டுள்ளார்.

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து பயிலுநர் ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:-

**ஆரம்பக்கல்வி:-**
ரீ. நிர்மலா (மாஸார்), ஜி. தர்சினா (தாமரைக் (கேணி), கே. யோகலக்ஷ்மி (புலோப்பளை), ரீ. வளர்மதி (வண்ணாங்கேணி), பீ. தங்கமலர் (பெரியபளை), எம். விக்னேஸ்வரி (முகமாலை), வி. இராஜேஸ்வரி (இத்தாவில்), பீ. வசந்தராணி (இயக்கச்சி), எம். தேவிவிமலா (பெரியபளை), திருமதி ஆர். ஆனந்தீஸ்வரி (பேராலை), எஸ். வாசுகி (பெரியபளை), ஆர். ராஜரத்தினம் (இத்தாவில்),

என். கேதீஸ்வரி(வண்ணாங்கேணி), ஆர். ஜெ. ஜொய்சி (புலோப்பளை), ஏ. ஜெயமதி (சோரன்பற்று).

**இந்துசமயம்**
கே. மணிகாரா (மாஸார்).

**றோமன் கத்தோலிக்கம் -**
வி. தயாபரி (இத்தாவில்), எஸ். அன்னமேரி (புலோப்பளை), ஏ. சாந்தினி (புலோப்பளை).

**கத்தோலிக்கம்:-**
ரீ. ஜெ. ஜெயந்தினி (பளை).

**தமிழ்:-**
என். நற்குணம் (புலோப்பளை, எஸ். செல்வநிதி (சங்கத்தாறுவயல்).

**கணிதம்:-**
கே. சண்முகதாஸ் (இத்தாவில்), எம். இந்துமதி (பெரியபளை), எஸ். பவானி (வண்ணாங்கேணி).

**விஞ்ஞானம்:-**
வி. தெய்வலஷ்மி (சங்கத்தாறுவயல்), எஸ். மோகனவனிதா (பளை), திருமதி. எஸ். வசந்தராணி (தம்பகாமம்).

**ஆங்கிலம்:-**
கே. செல்வரஞ்சிதம் (பளை), ஐ. குணேஸ்வரி (புலோப்பளை), ஏ. ஏ, பிலிப் அந்தனி (கிளாலி), ஏ. ஒகஸ்ரின் (கிளாலி), எஸ். இந்திரஜித் (புலோப்பளை].

**உடற்கல்வி:-**
எம். மகேஸ்வரி (சங்கத்தாறுவயல்)

**சமூகக்கல்வி:-**
திருமதி ரீ. சண்முகநாதன் (இத்தாவில்).

**சித்திரம்:-**
எஸ். குலேந்திரராஜா [இத்தாவில்], எம். செல்வம் [பளை].

**சங்கீதம்:-**
ரீ. கஜேந்திரன் [வண்ணாங்கேணி], ரீ. தயாநிதி [பேராலை], ஏ.பூரணம்[வண்ணாங்கேணி].

**நடனம்:-**
எஸ். சிவகுமாரி [தம்பகாமம்]

**வாழ்க்கைத்திறன்:-**
எஸ். கமலரஞ்சிதம் [புலோப்பளை].

**விவசாயம்:-**
எஸ். சிவகலாதேவி [புலோப்பளை.]

**மனைப்பொருளியல்:-**
பீ. செல்வராணி [இயக்கச்சி].

**வர்த்தகம்:-**
கே. பொன்னுத்துரை [முகமாலை]. [அ-ச]

[ மிகுதி நாளைய உதயனில் ]

## ஸ்ரான்லி வீதி வங்கியில் சனி, ஞாயிறு நிவாரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் எதிர்வரும் சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் 2ஆம் கட்ட மீளக்குடியமர்தல் நிவாரணம்வழங்கப்படஇருக்கிறது.

இவ்விரு நாட்களிலும் காலை 9 மணிமுதல் பகல் ஒருமணி வரையுமே கொடுப்பனவு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை அரியாலை மத்தி [ஜே/48] கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களுக்கும், ஞாயிற்றுக்கிழமை நல்லூர் வடக்கைச் [ஜே/52]சேர்ந்த குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும்.

இதேவேளை ஞாயிற்றுக்கிழமை முதற்கட்ட நிவாரணம்பெற்று, 2ஆம் கட்ட நிவாரணத்தைத் தவறவிட்டவர்களுக்கும் கொடுப்பனவு வழங்கப்பட இருக்கிறது.

இவ்வாறு நிவாரணம்பெறவுள்ள கிராமசேவையாளர் பிரிவுகளும் குடும்ப எண்ணிக்கையும் வருமாறு:-

அரியாலை கிழக்கு - 27, வண்ணார்பண்ணை வடகிழக்கு - 60, கந்தர்மடம் - 139, திருநெல்வேலி கிழக்கு - 112, கொக்குவில் கிழக்கு-162, கொக்குவில் மத்தி - 185

## மரண அறிவித்தல்கள்

### கதிரேசு வல்லிபுரம்

[அச்சுவேலி]

அச்சுவேலி தோப்பைச்சேர்ந்த சிலோன் தியேட்டேஸ் முன்னாள் பிரதம காசாளர் கதிரேசு வல்லிபுரம் 10 - 3 - - 90 ல் காலமானார். இவர் மகேஸ்வரியின் அன்புக்கணவரும், இந்துமதி, நரேந்திரன் (U. K), திலகவதி (கனடா), முருகேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், ரவீந்திரன் (இலங்கை மின்சார சபை யாழ்ப்பாணம்), தாரிணி, கமலநாதன் (கனடா), ஆகியோரின் மாமனரும், ரஜீவ், மிதிலா, சிந்துஜா, ஆகியோரின் பேரனும், காலம் சென்ற செல்லம், காலம்சென்ற சிதம்பரம், காலம் சென்ற பொன்னம்பலம், கதிராசிப்பிள்ளை, சரஸ்வதி, காலம்சென்ற வினாசித்தம்பி, காலம்சென்ற அப்புத்துரை, சுப்பிரமணியம், சின்னத்தம்பி (சிலோன் தியேட்டேஸ்) அண்ணாமலை (சிலோன் தியேட்டேஸ்) ஆகியோரின்) சகோதரரும் ஆவார். ஈமக்கிரியைகள் 15-03-1990 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் இராசவீதி தோப்பு அச்சுவேலியில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக அச்சுவேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
த. ரவீந்திரன்

வீமன்காமம்,
தெல்லிப்பளை. (12038)

### திருவாளர் கனகசபை வாமதேவா

நல்லூரைச் சேர்ந்த திருவாளர் கனகசபை வாமதேவா அவர்கள் 10-03-1990 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சொர்ணாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகசபையின் மகனும், காலஞ்சென்ற C. T. நவரட்ணத்தின் மருமகனும், காலஞ்சென்ற தருமபுத்திரன், பரமேந்திரன், தியாகேந்திரன், சந்திரவதனி, மதிவதனி, குமரேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நவரத்தினராஜா (கண்ணன்), சௌந்தரராஜன், நீலா, நந்தினி ஆகியோரின் மாமனாரும், சுதர்சனா, சஞ்சீவ், தாட்சாயினி, நிலாந்தினி, அருச்சுனா, ராஜ், அருண், மதுசூதனன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், இரத்தினசபாபதி (இரத்தினம்), காலஞ்சென்ற நடராஜா, நாகேந்திரா (ராசு) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற ஸ்ரீபத்மநாதன், என். சம்பந்தன், திருமதி வெற்றிவேலு, திருமதி பரமேஸ்வரன், திருமதி வன்னியசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-03-1990 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

327, நாவலர் வீதி,
நல்லூர். [11997]

### கந்தையா சிவசாமி

[பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக் கழகம்]

கந்தையா சிவசாமி (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக் கழகம்) அவர்கள் காலமானார்.

அன்னார் சதாசிவம் (இரத்தினபுரி), திருமதி தங்கம்மா சோமசுந்தரம், திருமதி இராசம்மா சுப்பிரமணியம், திருமதி நல்லம்மா கந்தையா, காலம் சென்ற சிவக்கொழுந்து, ஆறுமுகம், பொன்னாச்சி, சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரராவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 14-03-1990 பிற்பகல் 3-00 மணியளவில் புங்குடுதீவு கேரதீவு மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
க. இலங்கைநாதன்

6-ம் வட்டாரம்,
புங்குடுதீவு. [11995]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14- 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது9

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org